**செய்தி வெளியீடு எண்: 065** **நாள்: 25.01.2019**

**செய்தி வெளியீடு**

**TEXTN பன்னாட்டு ஜவுளிக் கண்காட்சி 2019**
**மற்றும்**
**IND TEXPO 2019 வாங்குவோர் விற்போர் சந்திப்பு துவக்க விழா**

----

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால்** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் 14.06.2018 அன்று **''ஜவுளித்தொழிலின் வளர்ச்சியை தமிழ்நாட்டில் மேலும் ஊக்குவிக்கும் விதமாக, நடப்பாண்டில் தமிழ்நாடு அரசின் சார்பாக கோயம்புத்தூரிலுள்ள கொடிசியா அரங்கில் பன்னாட்டு ஜவுளிக் கண்காட்சி 2 கோடி ரூபாய் செலவில் நடத்தப்படும்''** என அறிவிக்கப்பட்டது.

ஜவுளித் தொழிலின் அனைத்து உட்பிரிவுகளிலும் தமிழ்நாடு முதல் இடத்தை பிடித்துள்ளது. குறிப்பாக, பருத்தி நூல், பின்னலாடை, ஆயத்த ஆடை, பட்டுச் சேலைகள், பருத்திச் சேலைகள், வீட்டு உபயோக ஜவுளி இரகங்கள் போன்றவற்றின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் தமிழ்நாடு தன்னிறைவு பெற்று இந்தியாவில் முதன்மை மாநிலமாக விளங்குகிறது. தமிழ்நாட்டு ஜவுளி இரகங்கள் பாரம்பரியத்தினையும் தனித்துவத்தினையும் தன்னகத்தே கொண்டு தனக்கென பன்னாட்டு அளவில் பிரத்யேக வாடிக்கையாளர்களை கொண்டுள்ளது. ஜவுளித் தொழிலின் நலன் மற்றும் வளர்ச்சிக்காக மத்திய மற்றும் மாநில அரசுகள் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன.

அதன் மற்றொரு புதிய முயற்சியாக, **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி 2019–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 27 முதல் 29 முடிய மூன்று நாட்கள் கோயம்புத்தூர், கொடிசியா வர்த்தக மையத்தில் மிகப் பிரம்மாண்டமாக பன்னாட்டு ஜவுளிக் கண்காட்சி நடைபெறுகிறது. இக்கண்காட்சிக்கென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ.2 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.**

இதன்படி, பன்னாட்டு ஜவுளிக் கண்காட்சியின் **முன்னோட்ட விழா** 26.10.2018 அன்று கோயம்புத்தூர், ஹோட்டல் லீ–மெரிடியனில் **மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள்** மற்றும் **மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஓ.எஸ்.மணியன் அவர்கள் தலைமையில்** சிறப்புற நடைபெற்றது. முன்னோட்ட விழாவில் மாண்புமிகு அமைச்சசர் பெருமக்கள் பன்னாட்டு ஜவுளிக் கண்காட்சியின் கையேடு, சின்னம் மற்றும் கண்காட்சி குறும்படத்தினை வெளியிட்டு, இணையதளத்தினையும் துவக்கி வைத்தார்கள்.

இதனைத் தொடர்ந்து, இந்தியாவில் முதன்முறையாக தமிழ்நாடு அரசால் நடத்தப்படும் இக்கண்காட்சியில் **9,000 சதுர மீட்டர் பரப்பளவில் சுமார் 400 அரங்குகளில்** நூற்பு, நெசவு, பின்னலாடை, ஆயத்த ஆடை, தொழில்நுட்ப ஜவுளி, பட்டு, காதி, கைவினைப்

பொருட்கள் உள்ளிட்ட ஜவுளித் தொழிலின் அனைத்துப் பிரிவுகளிலும் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள பிரசித்தி பெற்ற ஜவுளித் தொழில் நிறுவனங்கள் பங்கேற்று, அவர்களது தயாரிப்புகளை **நூல் முதல் துணி இரகங்கள் வரை** அனைத்து ஜவுளிகளும் காட்சிப்படுத்தப்பட உள்ளது. மேலும், உள்நாட்டு மற்றும் பன்னாட்டு வாங்குவோர் (Buyers) கலந்து கொள்ளவும் உள்ளனர்.

இக்கண்காட்சியுடன் மத்திய அரசின் **டெக்ஸ்ப்ரோஸில் (TEXPROCIL) மற்றும் பெடக்ஸில் (PDEXCIL) அமைப்புகள் இணைந்து நடத்தும் IND TEXPO 2019 வாங்குவோர் விற்போர் சந்திப்பும் இணைந்து நடைபெற உள்ளது.** இக்கண்காட்சியில் தென்னிந்திய நூற்பாலைகள் சங்கம் மற்றும் பிற ஜவுளித் தொழிற்சங்கங்கள் இணைந்து கண்காட்சிப் பணிகளை மேற்கொள்கின்றனர்.

இக்கண்காட்சியின் மூலம் தமிழ்நாட்டு ஜவுளித் தொழிலின் சிறப்பம்சங்கள் காட்சிப்படுத்தப்படுவதுடன், உற்பத்தி பெருகி, உள்நாட்டு மற்றும் பன்னாட்டு விற்பனையை அதிகரித்து, அதிகளவில் ஏற்றுமதி வருவாய் ஈட்டுவதுடன், வேலை வாய்ப்பும் அதிகரிக்க வழிவகை ஏற்படும். ஜவுளித் தொழிலில், இந்தியாவிலேயே தமிழ்நாடு தொடர்ந்து முதன்மை மாநிலமாக விளங்குவதை மேலும் வலுப்படுத்த இக்கண்காட்சி உறுதுணையாக அமையும்.

இக்கண்காட்சியின் **துவக்க விழா 27.01.2019 ஞாயிற்றுகிழமை முற்பகல் 10.00 மணியளவில் கோயம்புத்தூர் கொடிசியா வர்த்தக மையத்தில் வைத்து நடைபெற உள்ளது.** மாண்புமிகு மத்திய ஜவுளித் துறை அமைச்சர், திருமதி **ஸ்மிர்தி ஜூபின் இரானி** அவர்கள் இவ்விழாவினை தொடங்கி வைத்து, விழாப் பேருரையாற்றவும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர், திரு.**எஸ்.பி.வேலுமணி** அவர்கள் விழா தலைமையுரையாற்றவும், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர், திரு. **ஓ.எஸ்.மணியன்** அவர்கள் விழா முன்னிலையுரையாற்றவும், மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் துணைத் தலைவர், திரு. **பொள்ளாச்சி வி. ஜெயராமன்** அவர்கள் விழா சிறப்புரையாற்றவும் அன்புடன் இசைந்துள்ளார்கள்.

**கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறையின் அரசு முதன்மைச் செயலர் திரு. குமார் ஜயந்த், இ.ஆ.ப., அவர்கள்** பன்னாட்டு ஜவுளிக் கண்காட்சி விளக்கவுரையாற்ற உள்ளார்கள்.

மேலும், இவ்விழாவில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், சீர்மிகு பெருமக்கள் மற்றும் ஜவுளி தொழிற்துறையினர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள். தொழில்முனைவோர்கள், ஜவுளித் தொழிற்துறையினர், வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் இவ்விழாவிற்கும், மூன்று நாட்கள் நடைபெறும் கண்காட்சிக்கும் வருகை புரிந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**